1018



OFFICE OF THE REGISTRAR ... REGISTERED ... MADRAS

உ

ஸ்ரீசெல்வ விநாயகர் துணை.

இராயவேலூருக்கு அடுத்த
சேண்பாகை செல்வவிநாயகர்

# இரட்டைமணி மாலை.

இது

புலத்தியபுரமென்னும் போளூர்
வித்வான்

**ஆ. தா. அரங்கசாமி நாயகரவர்கள்**

இயற்றியது

வேலூர் லாங்குபஜார் ஷாப்பு

**V. R. நாராயணசாமி நாயகரவர்களால்**

---

வேலூர்

...யகர் அச்சுக்கூடத்திற்

...க்கப்பெற்றது.

1914.

Q24'.38.2113CN
N14.
121453

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
17 ... 1914
MADRAS.

உ

ஸ்ரீசெல்வ விநாயகர் துணை,

# இராயவேலூருக்கு அடுத்த
# சேண்பாகை ஸ்ரீசெல்வவிநாயகர்

# இரட்டைமணி மாலை.

இது

புலத்தியபுரமென்னும் போளூர்

வித்வான்

ஆ. தா. அரங்கசாமி நாயகரவர்கள்

இயற்றியது

வேலூர் லாங்குபஜார் ஷாப்பு,

V. R. நாராயணசாமி நாயகரவர்களால்

---

வேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17453

## சாத்துகவி.

வேலூர் காலெஜ் தமிழ்ப்பிரதம பண்டிதர்

**பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள்**

இயற்றியது.

வளமருவு சேண்பாக்க மன்னுவிக்கினேச
னுளமகிழ வின்சொற்க ளொன்றிப்—பளகில்ல
தாகுயிரட் டைமணிபா ரமரங்கவேள்
வாகுறக் கோத்தான் மதித்து.

கணியம்பாடி வித்வான் அத்திப்பாக

**லிங்காசாரியாரவர்களியற்றிய**

## நேரிசை வெண்பா.

சீரோங்குஞ் சேண்பாகைச் செல்வ விநாயகன்மேல்
ஏரோங்கரங்கசாமி யாத்தான்—பேரோங்கத்
திரட்டு மினியமொழி தெள்ளமுதே போல
விரட்டை மணிமாலை யே.

சித்தாந்த சரபம் அஷ்டாவதானம்

## பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றியது.

---

சேண்பாகைச் செல்வவிநாயகர் தாளிற்றமிழ்நறுந்தேன் செவ்வேசொட்ட
மாண்பாக நயமணக்கு மிரட்டைமணி மாலையொன் றுமகிழ்விற் சூட்டிக்
காண்பார்கண் மனங்களிக்கவேசெய்தா னாற்றுறைகள் கரைகண்டோர்ந்த
பாண்பாடு முயர்போரூர் வருமரங்க சாமியெனும் பாவலோனே.

சென்னை கிரிஸ்டியன் காலெஜ் மாஜி தமிழ்ப்பண்டிதர்

உரையாசிரியர் சைவப்பிரசாரகர்

## ம-ள-ள-ஸ்ரீ, ஈக்காடு இரத்தினவேலு முதலியாரவர்கள்

இயற்றியன.

கண்டவர்க ணனிவியக்கு மிராயவே லூர்க்கணித்தாய்க் கவினுலாய
கொண்டறவழ் சேண்பாகைச் செல்வவிநாயகப்பெருமான் குரைகழற்கே
மண்டுபுக ழிரட்டைமணி மாலையொன் றுநாவவிட்டான் மகிதலத்தே
யெண்டிசையும்புகழ்வல்லியத்துவசனியற்றமிழ்நூலெண்ணிறேர்ந்தோன்.

நல்லரங்க சாமியெனும் புலமைசெறி கவிவல்லோ னம்மான்பாதம்
புல்லுமனத் தாதரவன் கணியம்பாடியிலுதித்த புலவர் கோமான்
சொல்லுமத்தியாபகலிங் காசாரி துணையடியைத் துணையாக்கொண்டு
பல்வரிய கலைகளுந்தேர் பாவல்லோன் பலரேத்திப் பகர மாதோ.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான்

## செங்கற்பட்டு ஸ்ரீமாந் அரங்கசாமிநாயகரவர்களியற்றியது.

### பஃறொடை வெண்பா.

விராய வளனெல்லா மேவி விளங்கும்
இராயவே லூரை யிணைந்து—பராவுறுசீர்
சேண்பாகை நன்னகர்வாழ் செல்வ விநாயகற்குச்
சேண்பாகைக் கற்கண்டைச் சீனிதனை—மாண்பாந்
திரட்டுப்பா கைக்கசக்கச் செய்யுஞ் சிறப்பார் ௫
இரட்டைமணி மாலை யிசைத்தான்—மருட்டகற்று
வித்யா குருவாக மேவுகணி யம்பாடி
அத்யா பகவிலிங் காசாரி—பத்திமைசேர்
நற்போளூர் மெய்ப்புலவ னல்லரங்க சாமிப்பேர்
பொற்பாக வாய்ந்தோன் புவியேத்த—நற்பாலர்
மூத்தோர் கவிவாணர் மூதறிஞர் தாமகிழ
மூத்தோன் கருணை முகந்து.

இராயவேலூர் வேலப்பாடி ஸ்ரீசண்முகாலயம்

பாலசோதிடம் வித்வான்

## வ. கு. வேலு நாயகரவர்களியற்றிய

### சந்த விருத்தம்.

ஆர்கலி சூழ்புவி மீதடியார்வித மாற்று மருச்சனையேற்
றன்புடனுளு மமர்ந்துற வீடருளையனறத் துறையார்ச்
சீர்பெறு நற்சேனை பாகைவிளங்கிடு செல்வ விநாயகன்மேல்
செம்மை நிரம்பியெக் காசுமிலாதொளிர் தெய்வவிரட்டைமணி
யேர்பெறு மாலையணிந்து பிறப்பெனு மின்ன லகன்றனனு
லெப்பெரு நாடுமிதற்கிணை யில்லையெனும் போளூர் வருமேழ்
கார்முகி னேர்தமிழ் மாகடலுண்டுயர் காசினி மாந்தர்புகழ்
கனசீரங்க சாமியெனும்பெயர் காமருபாவலனே.

சென்னை கிரிஸ்டியன் காலெஜ்மாஜி தமிழ்ப்பண்டிதர்

உரையாசிரியர் சைவப்பிரசாரகர்

ஈக்காடு இரத்தினவேலு முதலியாரவர்கள் குமாரர்

சென்னை வித்துவான்

## ஸ்ரீமத் ஈகை சபாபதி முதலியாரவர்களியற்றியது.

மன்னியசேண் பாகைவயினிலைத்துமிக வருமாந்தர் மனத்திருக்கின்
மயலொழித்துச் சிவஞானப் பெரும்பேற்றி னிற்றிளைக்கும் வகை
[யைக் காட்டத்
துன்னியவோர் செல்வவிநாயக னிரட்டைமணிமாலை சொலுநல்லோர்கள்
தோத்தரிக்க விசுவகுலவி லிங்காசாரிப்பால் தேர்துலக்க முற்றோன்
கன்னலென வேயினிக்குஞ் சொற்சுவையு மலங்காரக் கவினுங்காண
கற்பனையு நவரசமு மலங்காரங் களுநிரம்பக் கழறினால்
பன்னரிய விலக்கணவிலக்கிய நற்கடற் குடித்துப் பண்பின்வைகும்
பல்லவர்குலத்தரங்க சாமிநாயகனாகும் பாவலோனே.

## துதி நேரிசை வெண்பா.

சீருலவுஞ் சேண்பாகை சேர்ந்துவா ழைங்கரன்றன்
பேருலவு மாண்பதனைப் பேசவே—யேருலவு
மாங்கவன்பொற் பாதமல ராதாரத் தோடுமுன்
நீங்கறநீ நெஞ்சகமே செப்பு.

---

## உபாசனா மூர்த்தி துதி.

திருவளர் முகமுந் தோளுஞ் செவ்விய மயிலும் வேலும்
பொருவறு குறவர் மாதைப் புணர்ந்திட வேட்கை யாகித் ௮
தருவரு கானந் தோறுந் தனிமையி னடந்துயேவு
இருமலர்ப் பதமு மென்ற னிதயம்விட்ட கன்றிடாவே.

---

## குருவணக்கம்.

முந்தமரர் மாசகல மந்தரமிட் டமுதளித்த முகுந்தனேபோற்
சுந்தரன்சொற் சுருதியெனும்பரவைதனிற் றாய்தாலு சிலையைநாட்டிச்
சந்தமுறுந் தமிழ்தனை யெடுத்தளித்த கணியைநகர் சாருமேலாஞ்
சிந்தைபனுங்குருவிலிங்கா சாரியினற் பதமலரைச் சென்னிசேர்ப்பாம்.

---

# அவையடக்கம்.

பாலர்களறிவிலாது பார்மிசை மனையைக்கீறிற்
சாலவும் வியப்பதல்லாற்றடிவரோ சிற்பம் வல்லோர்
மாலறக் கலைகள்யாவு மண்மிசை யறிந்த தூயோர்
சீலமிலெனது புன்சொற் சிறப்புறக் கொள்வரன்றே.

உ
கணபதி துணை.

## வெண்பா.

சொற்கொண்ட மெய்யடியார் சூழ்ந்திலகு சேண்பாகை
நற்கொண்ட கோயிலா நன்கமரும்—விற்கொண்ட
பாதனை யைங்கரனே பாலகனை னுய்யும்வகை
நாதனே நின்னருளை நாட்டு. (1)

### கட்டளைக்கலித்துறை.

காட்டுறை யன்பரை நற்கதி யுய்த்திடு நாயகநீ
வாட்டியே யென்பவம் வல்வரு ளீவையால் வண்மையெலாங்
காட்டிய சூரனைக் காயிளை யோனன்று கன்னிகையாம்
வேட்டுவர் மாதின்முன் கூவக் களிறென மேவினையே. (2)

### வெண்பா.

மேவினவர் துன்பினையு மேவலர்தம் வன்மையையுந்
தாவியே சீர்தூக்கித் தாளீக்கு—மாவியே
நன்மையே வேண்டினே னாளுமிந்தப் பாலன்றன்
கன்மமே போக்கிநீ கா. (3)

### கட்டளைக்கலித்துறை.

காப்பவ னீயென்று காணாம லன்றுசீர்க் காகமென
மீப்புன றங்கிடுங் குண்டிகை வீழ்த்த மிகுசினத்தாற்
தீப்பொறி சிந்திட வெற்புறை மாமுனி சீறவன்று
மாப்பெரு நேயத்தைக் காட்டிய வைங்கர வாய்மையனே. (4)

## வெண்பா.

வாய்மைதான் சற்றுமிலா மாக்கொடும்பா லற்குன்றன்
றூய்மைமிகு பொன்னடியுந் தோன்றுமோ — நோய்மையக
லன்பர்வாழ் சேண்பாகை யாருநல லைங்கரனே
தூன்மழுறு மோர்மொழியைச் சாற்று. (5)

## கட்டளைக்கலித்துறை.

சாற்றரு நான்மறை நின்புகழ் போற்றத் தரணியெங்கு
மேற்ற முறைக்கவுந் தேரும லூழ்வயத் தேழையனு
மூற்றமின் மாதரைப் பாடியுங் கூடியு மூழிதொறுங்
காற்றினிற் பட்டுழல் புன்றுரும் பாமெனக் கன்றினனே. (6)

## வெண்பா.

கன்றுநீங் காநிகரக் காதலுட னாடினனுக்
கென்றுமுன் பாதமல ரீகுவையா — னன்றிலாய்
பேதையே னென்றென்னைப் பேணிடா யென்னிலோ
வேதியான் கூறுவே னின்று. (7)



600 008

## கட்டளைக்கலித்துறை.

இன்றுட னென்னனு நாளையு மென்றுமா யெங்குமாஇ
நின்றிடு பூரண காரண வாரண நீதியொடு
முன்றிருப் பாதங்க ளன்றியொர் திக்கிலா துற்றவெனைக்
கன்றிடா வண்ணமுன் காட்சியை யென்னெதிர் காட்டுவையே. (8)

## வெண்பா.

காட்டிடிற் பாலனேன் கண்ணேறு தாக்குமோ
வீட்டுமா நற்றவமு மில்லையோ—தாட்டுணைகள்
தாம்பெருப் பேதையேன் றாரணியை யேந்திடுமோர்
பாம்புக்குப் பாரமே பார். (9)

## கட்டளைக்கலித்துறை.

பார்த்திடிற் றீவினை பாறுமென் றுன்சரண் பாலனிதம்
பூர்த்தியிற் பற்றின னென்வினை தீர்த்திடும் புந்தியுறுஞ்
சீர்த்திமே வைங்கர நன்குசேண் பாகையிற் சேர்ந்துலவுங்
கார்த்திகழ் கண்டனின் புத்திர வும்பருங் காண்குலனே. (10)

### வெண்பா.

காணிடினுன் றண்ணருளைக் காலனையு மஞ்சகிலேன்
ருணுவே யுன்னடியே சாருவேன்—வீணுரைகள்
சாற்றிடும் பேயர்தமைச் சார்கிலே னென்னுரையை
யேற்றுநின் பேரருளை யீ. (11)

### கட்டளைக்கலித்துறை.

ஈந்திடும் வள்ளனீ யென் றுவந் தண்டின னின்பமிகும்
பூந்துணைப் பாதமென் சென்னியிற் சூட்டுதி போதமுற
மேந்தவே பேதைய னாயினு மைந்தனென் றெண்ணிநீ
நீந்தரு மால்கட ருண்டிடச் செய்திலை நீதியிதே. (12)

### வெண்பா.

நீதியறு வேசையர்க ணேசமதே வேண்டியுன்றன்
சோதியுறு பாதந் துதிசெய்யாப்—பேதையர்க
டம்மையே கூடியித் தாலமிசை மொர்ந்திடா
திம்மையே காத்திடுவ தென்று. (13)

## கட்டளைக்கலித்துறை.

என்றிந்த வேழைய னின்னருள் காணுவ னெம்பெருமா
னன்றுநா னுய்ந்தன னன்றியிப் பூவினி லாரிடத்துச்
சென்றுமற் றென்முறை யோதுவ னண்ணலே சீரிழந்த
பன்றிபின் போந்தவன் பாலக வுன்புகழ் பாடினனே. (14)

## வெண்பா.

பாடுவது முன்புகழே பார்ப்பதுவு முன்முகமே
நேடுவது முன்னடியே நித்தலுநான்—கூடுவது
மெய்யடியார் கூட்டமே மேதினியி லெஞ்ஞான்றும்
பொய்யாது கூட்டுறவு போய். (15)

## கட்டளைக்கலித்துறை.

போக்குதி மும்மலச் சேட்டையை யிவ்வுடல் பொன்றிடுங்கா
லாக்குதி யுன்னடிக் காளென வென்றுநா னண்டினனூற்
றூக்குங் கயமுக சூருயிர் நீக்கிடுந் தற்பரனே
காக்குநர் வேறியார் காசினி மீதினிற் கண்டிலனே. (16)

## வெண்பா.

கண்டகர் ளுருமுன் காதலினை யோர்கிலார்
தொண்டராய்ப் பார்மிசையிற் றோன்றிலார்—வண்டரு
மாலைசூழ் மார்பனே மண்மீது நிற்பதென்
சோலைசூ ழூரனே சொல். (17)

## கட்டளைக்கலித்துறை.

சொல்லிட வுன்பெய ரோர்முறை தீமை தொலைந்திடுமால்
வெல்லுத லாமென நான்மறை யேத்தும் விதமுணர்ந்திப்
புல்லிய னெண்ணில வாகப் பரவினன் பொய்கையமர்
நல்வசேண் பாகையி ளுதனின் பாலனை நாடிலையே. (18)

## வெண்பா.

நாடெலா மாண்டவரு நம்பவுனைப் போற்றாது
கேடெலா முற்றகதை கேட்டுமிந்தப்—பீடிலாப்
பேதையே னித்தலும் பேசிலே னின்புகழைத்
தாதையே நல்லருளைத்தா. (19)

## கட்டளைக்கலித்துறை.

தாயுடன் றந்தையுந் தாரமு மாதிநீ தாலமிசைச்
சேயனும் வாடின னேனென்று தின்னமுஞ் சிந்தையைய
மாயம தாற்றிடி னென்னையா ராள்குவர் மாசறுமின்
றூயபொற் சேவடி யீந்தெனை யாண்டருள் சொற்றனனே.

---

## வாழி.

அறநெறிவாழி தெய்வவந் தணர்வாழி யார்க்கும்
இறைமத யானைவாழி யிலங்கிடு குமரன்வாழி
நறுமலர்வாவிசூழு நல்லசேண் பாகைவாழி
குறுமுனி யீந்தமூன் று குறைவிலாத்தமிழும் வாழி.

## இரட்டைமணிமாலை முற்றிற்று.

சுபமஸ்து.

600 008.
171453
(20)